

மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வரும் 15மற்றும் 16 ஆகிய இரண்டு நாட்கள் கலைஞர் சிலை திறப்பு விழா, கொடி ஏற்று விழா உள்ளிட்ட கழக நிகழ்ச்சிகள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்ள உள்ளார்கள். இதையடுத்து மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரி வளாகத்தில் முதல்வர் வருகை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிக்கான முன்னேற்பாடுகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆய்வு செய்தார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ்.ஸ்ரீகாந்த், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.செல்வமணி, மயிலாடுதுறை வடக்கு ஒன்றியச் செயலாளர் என்.இளையபெருமாள், பொதுக்குழு உறுப்பினர் நத்தம் ஏ.வின்சென்ட் மற்றும் பலர் உள்ளனர்.







சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மத்திய பகுதி இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் மணலி எஸ்.ஸ்டாலின் ஏற்பாட்டில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திருவொற்றியூர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலையிலும் பகுதி கழக செயலாளர் 2 வது மண்டல குழு தலைவர் ஏ.வி.ஆறுமுகம் தலைமையில் மணலி அண்ணா சிலை அருகில் நடைபெற்றது, இந்நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கேபிள் த.வேல்கணேசன் வரவேற்றார், இதில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம் மற்றும் கழக இளைஞர் அணி துணை செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல் மற்றும் கழக மீனவர் அணி துணை தலைவரும் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ஆகியோர் கலந்து கொண்டு நான்காண்டு திராவிட மாடல் அரசின் சாதனை குறித்து சிறப்புரையாற்றினார்கள்,

### சென்னை நொளம்பூரில் பத்திரப் பதிவுத் துறை சார்பில்

# மாற்றுத் திறனாளிகளால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த சேவை மையம்!

## அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்தார்!

சென்னை, ஜூலை 12-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி, பதிவுத்துறை, பொது மக்களுக்கு அதிநவீன தொழில்நுட்பவசதிகளுடன் அனைத்து பதிவுசேவைகளையும் எளிதாக வழங்கி, அரசுக்கு வருவாய் ஈட்டித்தரும் முக்கிய துறையாக தொடர்ந்து செயல்பட்டுவருகிறது.

கடந்த 2024 - 2025 ஆம் நிதியாண்டில் தமிழகம் முழுவதும் 33, 60, 382 ஆவணங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அதில் சென்னை மண்டலத்தில் மட்டும் 3, 30, 565 பதிவு செய்யப்பட்டுள்ளன.

பதிவுத்துறையின் சேவைகளை விரைவாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கில் பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தபட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக,



நேற்று, சென்னை நொளம்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சார்பதிவாளர் அலுவலகங்கள் வளாகத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, சுயஉதவிகுழுவைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளால் நடத்தப்பட உள்ள "ஒருங்கிணைந்த சேவை மையம்" திறந்துவைக்கப்பட்டது.

இந்த சேவை மையத்தின் மூலம் பொதுமக்களுக்கு வில்லங்கச்சான்று விண்ணப்பித்தல் (Applying for EC) ஆவணத்தின் சான்றிட்ட நகல் விண்ணப்பித்தல் (Applying for CC) திருமண வடிப்பு விண்ணப்பித்தல் (Marriage Extract) வில்லை முன்பதிவு செய்ய விண்ணப்பித்தல் (Booking of Tokens) இணைய வழி ஆவணம் உருவாக்குதல் (Online Registration) சங்க பதிவு விண்ணப்பித்தல் (Applying for Societies Registration) கூட்டாண்மை நிறுவன பதிவு விண்ணப்பித்தல் (Applying for Firms Registration) உள்ளிட்ட சேவைகள் குறைந்த கட்டணத்தில் வெளிப்படைத்தன்மையுடன் அளிக்கப்படும்.

இந்த பணிகளை மேற்கொள்ளும் சுயஉதவிகுழுவைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு நிலையான வருமான வாய்ப்பும் இதன் மூலம் கிடைக்கப்பெறும்.

இந்நிகழ்சியில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம், க.கணபதி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அரசுசெயலாளர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதிஷ், பதிவுத்துறை தலைவர் தினேஷ்பொன்ராஜ் ஆலிவர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தென்காசியில் 4 நாட்கள் நடைபெறுகிறது!

# ஐந்தருவி பகுதியில் குற்றாலம் சாரல் திருவிழா!

## மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் அறிவிப்பு!

தென்காசி, ஜூலை.11-

தென்காசியில் குற்றாலம் சாரல் திருவிழா வருகிற 19-07-2025 ல் துவங்கி 27-07-2025 வரை அதாவது 9 நாட்கள் நடைபெறுகிறது. இதில்19 ம் தேதி முதல் 22 ம் தேதி வரை 4 நாட்கள் ஐந்தருவி பகுதியில் உள்ள சுற்றுச்சூழல் பூங்காவில் மலர் கண்காட்சி நடைபெறுகிறது என தென்காசி மாவட்ட ஆட்சியர் ஏ.கே. கமல் கிஷோர் பேட்டியின் போது செய்தியளர்களிடம் தெரிவித்தார்.

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கூட்டரங்கில் 2025-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சாரல் விழா தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் ஏ. கே.கமல் கிஷோர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

தென்காசி மாவட்டத்தில் ஆண்டுதோறும் சாரல் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதன்படி இந்த ஆண்டும் முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி ஜூலை மாதம் 19 ம் தேதி முதல் 27 ம் தேதி வரையில் குற்றாலத்தில் நடைபெற உள்ளது.

மேலும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பாக ஐந்தருவிப் பகுதியில் உள்ள சுற்றுச் சூழல் பூங்காவில் 19.07.2025 முதல் 22.07.2025 வரையில் மலர்க்கண்காட்சி நடைபெறவுள்ளது.

சாரல் திருவிழாவில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டு போட்டிகள் நடைபெற உள்ளது.

19.07.2025 அன்று பரத நாட்டியம், ஜிக்காட்டம், நையாண்டிமேளம் , கரகாட்டம் மற்றும் திரைப்பட மெல்லிசை நிகழ்ச்சியும், 20.07.2025 அன்று கொழு கொழு குழந்தைகள் போட்டி,கிராமியகலைநிகழ்ச்சி, கைச்சிலம்பாட்டம் நிகழ்ச்சி,கேரளா மாநில கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் திரைப்பட மெல்லிசை நிகழ்ச்சியும், 21.07.2025 அன்று யோகாசன போட்டிகள், நாட்டிய நாடகம்,வில்லிசை நிகழ்ச்சி, தோல்பாவைக் கூத்து நிகழ்ச்சி, மற்றும் திரைப்பட மெல்லிசையும்.

22.07.2025 அன்று படகுப்போட்டி, பல்சுவை நிகழ்ச்சி,கிராமிய கலை நிகழ்ச்சி, கொடைக்கானல் - பூம்பாறை பழங்குடியின மக்களின் தோடர் நடனம் நிகழ்ச்சி,கர்நாடக மாநில கலைஞர்களின் கலைநிகழ்சிகள் மற்றும் திரைப்பட மெல்லிசையும், 23.07.2025 அன்று பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியம்,கவிதை மற்றும் பாட்டுப்போட்டி,திருநங்கைகள் வழங்கும் பல்சுவை நிகழ்சிகள், கணியான்கூத்து நிகழ்ச்சி, பரதநாட்டிய நிகழ்ச்சி, கர்நாடக மாநில கலைஞர்களின் கலைநிகழ்சிகள் மற்றும் மெல்லிசை நிகழ்ச்சியும்,

24.07.2025 அன்று கோலப்போட்டி, வில்லிசை நிகழ்ச்சி, மல்லர்கம்பம் நிகழ்ச்சி, பரதநாட்டியம் நிகழ்ச்சி, ஆந்திரா தெலுங்கானா மாநில கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள், மற்றும் நாட்டுப்புற பல்சுவை நிகழ்ச்சியும், 25.07.2025 அன்று அடுப்பில்லாமல் சமைத்தல் மற்றும் சிறுதானிய உணவுப்போட்டி, நையாண்டிமேளம் மற்றும் கரகாட்டம், கிளாரிநெட் இசைநிகழ்ச்சி, தப்பாட்டம் நிகழ்ச்சி, ஆந்திரா தெலுங்கானா மாநில கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள் மற்றும் திரையிசை தெம்மாங்கு நிகழ்ச்சியும்,26.07.2025 அன்று பளுதூக்குதல், வலுதூக்குதல் மற்றும் ஆணழகன் போட்டி, கிராமிய கலை நிகழ்ச்சி,நகைச்சுவை நிகழ்ச்சி,ஜிம்ளாமேளம் (எருதுகட்டு மேளம்) நிகழ்ச்சி,மெல்லிசை நிகழ்ச்சியும்,

27.07.2025 அன்று நாய்கள் கண்காட்சி,நாட்டிய நாடகம் நிகழ்ச்சி, கிராமிய நாட்டுப்புற கலைநிகழ்ச்சி,மாடாட்டம் மற்றும் மயிலாட்டம் நிகழ்ச்சி, மகாராஷ்ரா மாநில கலைஞர்களின் கலைநிகழ்ச்சி,இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

மேலும் சாரல் திருவிழா துவக்க நாளான 19 ஆம் தேதி அன்று அமைச்சர்கள்,நாடாளுமன்ற உறுப்பினர்,சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அப்போது மாவட்ட வருவாய் அலுவலர் சீ. ஜெயச்சந்திரன் உடன் இருந்தார்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம்2 வார்டு எண்:18 க்கு உட்பட்ட திருவள்ளுவர் நகர், யசோதா நகர், ஆகிய பகுதிகளில் நடைபெற்ற வருகின்ற சாலை அமைக்கும் பணிகளை மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு தரமாக சாலைகள் அமைக்குமாறு அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார் உடன் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் உதவி பொறியாளர் மாமன்ற உறுப்பினர் பிரேமலதா பண்டரிநாதன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகிராமன் வட்டக் கழக செயலாளர்கள் VN.சிலம்பரசன் கோ. ரங்கநாதன் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் குடியிருப்போர் நல்வாழ் சங்க நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

### முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு

# ‘அன்னம் தரும் அமுதகரங்கள்’ 142வது நாள்!

## திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஜூலை 12-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 142 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு இன்று (11.7.2025) திரு.வி.க நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 71 அ, அருந்ததி நகர், காந்தி சிலை அருகில். 2) வட்டம் 74, நேருஜோதி நகர், அயனாவரம், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு





காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருகர மேயர் பிரியாராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, செ.தமிழ் வேந்தன். புனிதவதி எத்திராஜன், எம்.சரவணன், பி.உதயசங்கர், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா. ராஜ்முகமது, திரு.வி.க.நகர் வடக்கு / தெற்கு வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ்பாபு, மா.ருத்ர மூர்த்தி, எம்.ஏ.டீக்கா, எம். இசட்.அபோய், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம்.தமிம், பொல்லு டி. சுரேஷ்குமார், வி.க.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், எஸ்.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L. சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### கடலூர் மேற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

# சிதம்பரம் வருகை தரும் முதலமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு!

## அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரை! சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலை!

## டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் தலைமை!

கடலூர், ஜூலை 12 -

கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம், நெய்வேலி தொ.மு.ச. கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

சிதம்பரம் வருகை தரும் முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்ற ப்பட்டது.

இச்செயற்குழுக் கூட்டம் 9.7.2025 புதன்கிழமை காலை 10 மணியளவில், கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

கடலூர் மேற்கு மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார்.

நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன் முன்னிலை வகித்தார்.

கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சருமான சி.வெ. கணேசன் கலந்துகொண்டு பேசுகையில்,

கடலூர் மாவட்டத்திற்கு வரும் 14 தேதி வருகை தந்து மறுநாள் 15ஆம் தேதி உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்தை சிதம்ப ரத்தில் துவக்கி வைக்க உள்ளார்கள்.

எனவே கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வரலாறு காணாத அளவில், கடலூர் மேற்கு மாவட்டக் கழகம் சார்பில், சிறப்பான மாபெரும் வரவேற்பு அளிக்க வேண்டும் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சா.இராசவன்னியன், பாவாடை கோவிந்தசாமி, வி.கே.வெங்கட்ராமன், மாவட்டப் பொருளாளர் ஜி.தண்டபாணி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் ஆர்.எஸ்.எம்.தணிகை செல்வன், ஆனந்தி சரவணன், ஒன்றியச் செயலாளர்கள் பட்டூர் அமிர்தலிங்கம், தி.வேல்முருகன், கனக கோவிந்தசாமி, அடரி சின்னசாமி, அ.குணசேகரன், ஆர். சந்தோஷ் குமார், ஆசைத்தம்பி, சுரேஷ், இராமச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பொ.புகழேந்தி, என்.பலராமன், ஆர்.இராதாகிருஷ்ணன், செந்தமிழ்ச் செல்வி கருப்புசாமி,

நகரச் செயலாளர்கள் க.தண்டபாணி, க.இராஜேந்திரன், ப.மணிவண்ணன், ஆர். குருநாதன், வி.பி.பி. பரமகுரு, பேரூர்ச் செயலாளர்கள் ஜெயமூர்த்தி, சுந்தரவடிவேல், செல்வம், குமரவேல், கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார், துணை அமைப்பாளர்கள் ஆர். ராஜேஷ், செல்வ.துரைராஜ், ஆ.சதாம் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர பேரூர்க் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.





செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. இளைஞரணி சார்பில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன் அறிவிப்புக்கிணங்க, ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை குறித்த இளைஞர் அணி, மாணவர் அணி ஆலோசனைக் கூட்டம் பகுதிச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் தலைமையில் பகுதி இளைஞரணி அமைப்பாளர் எல்.டில்லிபாபு முன்னிலையில் நடைபெற்றது. இதில் ஜெ. இன்சமான், எம்.இளவரசன், சி.ஆர்.நரேஷ்குமார், பி.யோகேஷ், ஏ.கலைவாணன், கே.பிரபு, எம். அருண்கண்ணன், கே.எஸ்.புனிதன், டி.ஜோயல் ரூபண்ராஜ், ஜி.ஜான்சன், ஏ.அரவிந்த்ராஜ், ஆர். ராஜேஷ், எம்.சுந்தரமூர்த்தி, ஏ.அஜீத்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.